## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சிறிய தேயிலைத் தோட்டங்கள் அபிவிருத்தி அதிகாரசபையின் (“அதிகாரசபை”) 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, அதிகாரசரபயின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவனம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையின் மீது

கணக்கீடு செய்தல் மற்றும் நிறுவனம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதல் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம் இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகாரசபைக்குள்ள உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மீது தொடர்ந்தியங்கும் நிலைமை முடிவடையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகாரசபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- அதிகாரசபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிறுவனம் இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்று தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | தொடர்புடைய நியமங்களுடனான இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமம் 01 இன் 129 (இ) பந்தியின் பிரகாரம் | நிதி நிலைமைக் கூற்று, நிதி செயலாற்றுகைக் கூற்று மற்றும் நிதிப் பாய்ச்சல் கூற்றுக்களின் முகப்பில் | நியமங்களுக்கு அமைவாக நிதிக் கூற்றினைச் சமர்ப்பித்தல் |

| | | | |
|---|---|---|---|
| | நிதிக்கூற்றுக்களை விளங்கிக் கொள்ளுகையில் மற்றும் ஒப்பிடுகையில் உதவக் கூடிய வகையில் நிதி நிலைமைக் கூற்று, நிதி செயலாற்றுகைக் கூற்று, மூலதனத்திலான மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுகளில் முகப்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள உருப்படிகளின் உசாத்துணை தகவல்கள் ஒவ்வொரு கூற்று மற்றும் ஒவ்வொரு வரிசையிலும் உருப்படியினை சமர்ப்பித்துள்ள தொடர் முறையிலேயே வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அட்டவணையுடன் தொடர்பு இலக்கம் மாறாது புதிய படிவத்தில் நிதிக்கூற்று தயாரிக்கப்பட்டுள்ளது என்பது அவதானிக்கப்பட்டது. அதற்கமைய 2020 ஆம் ஆண்டிலும் அரச துறையில் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்கி தாயரிக்கப்பட்டு கடந்த ஆண்டுகளுடன் பொருந்தும் வகையில் அட்டவணை இலக்கங்களுடன் மாறுபடாது நிதிக் கூற்று தயாரிக்கப்பட்டுள்ளது. கணக்கீட்டு அவதானிப்பு மூலம் பிரேரிக்கப்பட்டுள்ளவாறு 2021 ஆம் ஆண்டுடன் நிதிக் கூற்று தயாரிக்கையில் அட்டவணை இலக்கமிடுகையில் தொடர் முறையில் தயாரித்து சமர்ப்பிக்கப்படும் என இதன் மூலம் குறிப்பிடுகின்றேன். | வேண்டும். |
| (ஆ) | முழுமையாக தேய்மானத்திற்கு உட்படுத்தப்பட்டிருந்த போதிலும் இன்னமும் பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ள ரூபா 1,147,100 மொத்த கிரயத்தினை கொண்டுள்ள பிரதான அலுவலக மின் பிறப்பாக்கி இயந்திரம் உள்ளிட்ட அலுவலக உபகரணங்கள், இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 92 (ஆ) பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்காததுடன் இந்த சொத்துக்கள் தொடர்பான மதிப்பீட்டுக் குறைபாடு இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 03 | இணங்குகின்றேன். அதிகாரசபையின் சொத்துக்கள் மீள்மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருந்தது மதிப்பீட்டுத் திணைக்களத்தின் உதவியுடன் ஆகும். அதற்கமைய 2021 ஆம் ஆண்டின் மீள் மதிப்பீட்டுப் பெறுமதிக்கமைய இறுதிக்கணக்கில் ஒப்பீடு செய்வதற்கு குறித்துக் கொள்ளுகின்றேன். | சொத்துக்களின் பயன்படு ஆயட்காலத்தினை மீண்டும் மீளாய்வு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இன் பிரகாரம் திருத்தப்பட்டு மீண்டும் நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் 49 ஆவது பந்தியின் பிரகாாம் சொத்துக்கள், கருவிகள் மற்றும் உபகரண உருப்படிகளை மீள்மதிப்பீடு செய்கையில் அந்தச் சொத்துக்கள் உரித்தாகும் முழு சொத்து வகுப்பிற்கும் முழுமையாக மீள்மதிப்பீடு செய்யப்பட வேண்டும் எனினும், காலி பிரதேச அலுவலகத்தில் தளபாடப் பொருத்துக்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் மற்றும் அதிகாரச்சபைக்குச் சொந்தமான 36 வாகனங்களில் 18 வாகனங்கள் மட்டும் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு இருந்தன. அதே போன்று ரூபா 38,815,350 பெறுமதிக்கான நிதிக் கூற்றுக்களில் காட்டப்படும் அதிகாரச்சபைக்குச் சொந்தமான காணியானது 2005 திசெம்பர் 31 ஆம் திகதியின் பின்னர் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. அதனால் பாரிய விலை ஏற்றத்துடன் காணப்படும் இந்தக் காணிகளின் நியாயமான பெறுமதி நிதிக் கூற்றுக்களில் எடுத்துக் காட்டப்பட்டிருக்கவில்லை | பொதுத் துறைக் கணக்கீட்டு நியமம் 7 இன் 49 ஆவது பந்திக்கமைய ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் மீள்மதிப்பீடு செய்கையில் சொத்துக்கள், கருவிகள் மற்றும் உபகரண வகுப்புகள் முழுமையாக மீள்மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும் மீள்மதிப்பீட்டில் குறித்த ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்படவில்லை. 2021 ஆம் ஆண்டில் கணக்கு தயாரிக்கையில் மீள்மதிப்பீடு உள்ளடக்கப்படாத சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு ஒப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். 2020 ஆம் ஆண்டில் வாகன மீள்மதிப்பீடு உள்ளடக்கப்படாத வாகனங்களை 2021 ஆம் ஆண்டில் மீள்மதிப்பீடு செய்வதற்குக் குறித்துக் கொள்கின்றேன். இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியமம் 7 இன் 47 ஆம் பந்தி மூலம் பரிந்துரை செய்யப்பட்டுள்ளவாறு சொத்துக்கள் கருவிகள் மற்றும் உபகரணங்கள் ஒவ்வொரு 3 வருடங்களுக்கு ஒரு தடவையோ அல்லது 5 வருடங்களுக்கு ஒரு தடவையோ மீள்மதிப்பீடு செய்யப்படவேண்டும் என்பது குறிப்பிடப்பட்டுள்ளது. இறுதியாக காணி மீள்மதிப்பீடானது தனியார் மதிப்பீட்டாளர்கள் இருவர் மூலம் கவனத்திற் கொள்ளத்தக்க தொகையினைச் செலுத்தி மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆயினும் வருடாந்தம் | ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் வகுப்புகளாக நியமத்தின் பிரகாரம் முழுமையாக மீள்மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். அவ்வாறே அனைத்து மூன்று வருடங்களுக்கு ஒரு தடைவ அல்லது ஐந்து வருடங்களுக்கு ஒரு தடவை காணி மீள்மதிப்பீடு செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ல என்பது அவதானிக்கப்பட்டது. | ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாட்டுத் தொகை மட்டுப்படுத்தப்பட்டதன் அடிப்படையில் இவ்வாறான செயற்பாடுகள் நியமங்களுக்கேற்ப மேற்கொள்ள முடியாதுள்ளது. ஆயினும் 2020 ஆம் ஆண்டில் அதிகாரச்சபைக்குச் சொந்தமான காணியினை மீள்மதிப்பீடு செய்து தருமாறு மதிப்பீட்டுத் திணைக்களத்திடம் கேட்கப்பட்டுள்ளது. | |
| (ஈ) | அதிகாரசபைக்கு திறைசேரியினால் மற்றும் வேறு அரச நிறுவனங்களினால் நிவாரணம் மற்றும் மானியங்கள் வருடாந்தம் கிடைக்கின்ற போதிலும் அந்த நிவாரணம் மற்றும் மானியங்களைக் கணக்கீடு செய்வதற்கு குறித்த கணக்கீட்டுக் கொள்கை அந்த நிவாரணம் மற்றும் மானியம் பெற்றுக் கொடுக்கப்படுதல் உள்ளடங்கலாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக் கவில்லை. மீளாய்வாண்டில் மட்டும் அதிகாரச்சபைக்குக் கிடைத்திருந்த நிவாரணம் மற்றும் மானியங்களின் பெறுமதி ரூபா 1,088 மில்லியன் ஆகும். | நிதிக் கூற்றுக்களில் சமர்ப்பிப்பதற்கு மேலதிகமாகக் கணக்காய்வு அவதானிப்பு மூலம் சுட்டிக் காட்டப்பட்டுள்ள விதத்தில் 2021 ஆம் ஆண்டில் கணக்குக் குறிப்பின் மூலமும் வெளிப்படுத்துவதற்கு குறித்துக் கொள்கின்றேன். | நிவாரணம் மற்றும் மானியங்களைக் கணக்கீடு செய்வதற்குரிய கொள்கைகள் மற்றும் நிவாரணம் பெற்றுக் கொடுக்கப்படும் நிபந்தனை என்பன நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |

**1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்திச் சங்கங்களுக்கான 1998 ஆம் ஆண்டில் கடன் அடிப்படையின் கீழ் பெற்றுக் கொடுத்திருந்த 102 வாகனங்களின் | 2019 ஆம் ஆண்டில் நிதிக் கூற்றில் கழகங்களில் இருந்து மேலும் அறவிடப்பட வேண்டிய கடன் தொகையினை மீளமைக்கப்பட்ட வாகனக் கடனாகக் கணக்கீடு | 2021 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றினால் ஒப்பீடுகள் திருத்தப்பட வேண்டியதுடன் வாகனங்களை |

| | | | |
|---|---|---|---|
| | நிலுவை கடன் தவணைக்காக 2019 ஆண்டு வரையிலும் கிடைக்க வேண்டிய மீதியான ரூபா. 6,664,321 திறைசேரி அனுமதியின்றி ஏடுகளில் இருந்து நீக்கப்பட்டு 23 வாகனங்களை விற்பனை செய்ததனால் கிடைக்கப் பெற்றிருந்த ஆயினும் திறைசேரிக்கு வழங்கப்பட வேண்டிய ரூபா 9,207,958 தொகைக்குக் குறையாக மாற்றீடு செய்யப்பட்டு எஞ்சிய ரூபா 2,491,162 நானாவித வருமானக் கணக்கிற்கு மாற்றப்பட்டு இருந்தது. அதற்கமைய அந்த தொகையில் மீளாய்வாண்டில் வருமானம் அதிகமாக நிதிக் கூற்றில் காட்டப்பட்டிருந்தது. | செய்யப்பட்டிருந்ததுடன் கழகங்களினால் கடன் செலுத்தப்படாத வாகனங்களைக் கைப்பற்றி விற்பனை செய்யப்பட்ட வாகனங்களின் பெறுமதியினை திறைசேரிக்கு தீர்க்கப்பட வேண்டிய போதிலும் செலுத்தப்பட வேண்டிய தொகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது எனினும் 2019 கணக்காய்வு அறிக்கையின் மூலம் மீளமைப்பு செய்யப்பட்ட கடன் மீதிகள் குறித்த தீர்க்கப்பட வேண்டிய தொகையினை அறிந்து கொண்டு கணக்குகளில் ஈடுசெய்யப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிப்புகளின் கீழ் குறிப்பிடப்பட்டிருந்தது. அது திருத்தப்பட்டு 2020 ஆம் ஆண்டு நிதிக்கூற்றில் திருத்தப்பட்டுள்ளது. அதே போன்று அந்த ஈடு செய்தல் தொடர்பில் கணக்குக் குறிப்பு மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ள போதிலும் குறைபாடுகளாக மாற்றீடு செய்தலாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கமைய 2021 கணக்குகளின் மூலம் பிரேரிக்கப்பட்டவாறு திருத்தப்பட்டு ஈடு செய்வதற்குக் குறித்துக் கொள்ளுகிறேன். | விற்பனை செய்ததனால் கிடைத்த தொகையினை திறைசேரிக்கு மாற்றப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் ரூபா. 5,427,829 பெறுமதியான வட்டி வருமானத்தின் அடிப்படையில் செலுத்தப்பட வேண்டிய ரூபா. 1,302,679 பெறுமதியான வருமான வரி பொறுப்பு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகாரசபையானது 1975 இன் 35 ஆம் இலக்க சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட அதிகாரசபையாகும். இந்த அதிகாரசபையின் அடிப்படை நோக்கம் இலாபம் பெறுவது அல்ல என்பதுடன் சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதற்கான உதவிச் சேவையினை வழங்குவதும் ஆகும். அதனால் அதிகாரசபையானது வரி | வட்டி வருமானத்தின் அடிப்படையில் செலுத்தப்பட வேண்டிய வருமான வரித் தொகையினைக் கணக்கிட்டு உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு செலுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | செலுத்துவதில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளது. அவ்வாறே வட்டி வருமானத்திற்கு நேரடியாக உரித்தாகும் தடுத்து வைக்கப்படும் வரி குறைக்கப்பட்டதன் பின்னரான பெறுமதி, வட்டி வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. அவதானிப்புகளில் காட்டப்பட்டுள்ள வட்டி வருமானத்தின் அடிப்படையில் வரித் தொகையான ரூபா. 1,322,679 பெறுமதியினை வரி செலுத்தப்பட வேண்டியது அல்லது வரி புறக்கணிப்பு செய்யப்பட்டது என்பது தொடர்பில் வருமான வரித் திணைக்களத்தினால் எதுவிதமான அறிவிப்பும் செய்யப்படவில்லை என்பதனைத் தெரிவித்துக் கொள்கின்றேன். | |
| (இ) | 2017 ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ள இடர் காரணமாக சிறு தேயிலைக் காணிகளுக்கு ஏற்பட்ட சேதத்திற்காக நிவாரணக் கொடுப்பனவு வழங்கப்படுவதற்காகப் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த தொகையில் எஞ்சியிருந்த ரூபா. 46,991,673 உம் மற்றும் தேயிலை உர செயற்றிட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்குவதற்காக 2016 ஆம் ஆண்டு அதிகாரசபையிடம் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த தொகையில் எஞ்சிய ரூபா. 21,335,907 உம் மீண்டும் திறைசேரியிடம் மாற்றப்பட்ட வேண்டியிருந்த போதிலும் பொறுப்பாக நிதிக் கூற்றுக்களில் | 2017 ஆம் ஆண்டின் வெள்ள பேரிடருக்கு உட்பட்ட காணிகளுக்காகப் பெற்றுக் கொடுக்கப்பட்ட நிவாரணங்கள் வழங்கப்பட்டு எஞ்சியிருந்த தொகையினை அமைச்சிற்குத் தெரிவிக்கப்பட்டு பணிப்பாளர் சபையின் அனுமதியுடன் மீள் பயிரிடல், புதிய பயிரிடல் மற்றும் கைவிடப்பட்ட நிவாரணத்திற்காக செலுத்தப்பட்டுள்ளது. அதனால் கணக்குகளில் குறிப்பிடப்பட்டு இருந்த ரூபா. 46,991,673 தொகையானது பெயரளவு பெறுமதியினை மட்டும் கொண்டுள்ளதுடன் குறித்த ஆண்டில் ஈடு செய்தல் குறிப்புகள் மேற்கொள்ளப்படாததன் அடிப்படையில் கணக்குகளில் காட்டப்பட்ட மீதியாகும். 2016 ஆம் ஆண்டில் தேயிலை உர நிறுவனமாக பிரதேச அலுவலகத்தின் ஊடாக | நிவாரணக் கொடுப்பனவு செலுத்தப்பட்டதன் பின்னர் எஞ்சியுள்ள தொகையை திறைசேரியிடம் மாற்றப்பட வேண்டியதுடன் திறைசேரி அனுமதியின்றி செலவுகள் செய்யப்படலாகாது. |

| | |
|---|---|
| காட்டப்படாது முன்னைய வருட ஈடு செய்தலாக சேர்க்கப்பட்ட மிகையாக ஈடு செய்யப்பட்டிருந்தது. இதனால் அதிகாரசபையின் பொறுப்பு மேற்கூறிய தொகையினால் குறைவாகவும் சேர்க்கப்பட்ட மிகை அதிகமாகவும் காட்டப்பட்டிருந்தது. | ரூபா. 1,275.95 மில்லியன் தொகை செலுத்தப்பட்டுள்ளது. அந்த மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளுள் ரூபா. 21,335,907 தொகையானது விவசாயிகளால் வழங்கப்பட்ட காசோலைகள் சமர்ப்பிக்கப்பட்டு பணமாக்கப்பட்டிருக்கவில்லை. அந்தத் தொகை பணிப்பாளர் சபையின் அனுமதியுடன் தீர்மானிக்கப்பட்ட காலத்தினுள் பயிர்ச் செய்கையை நிறைவு செய்யும் சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களை ஊக்குவிப்பதற்கு ஆயுதத் தொகையினைக் கொள்வனவு செய்வதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்தப் பெயரளவு மீதிகளை மேலும் முன்னால் கொண்டு செல்வதற்காகத் தடுத்து வைக்கப்பட்ட உழைப்புக் கணக்கிற்கு மாற்றி குறிப்பின் மூலம் ஈடு செய்தல்களை வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

### 1.5.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுடன் குறித்த பிரதேச அலுவலகங்களின் நிதிக் கூற்றுக்களை ஒப்பிடுகையில் 4 விடயங்களுக்குரியதாகக் குறிப்பிடப்பட்டிருந்த பெறுமதிகளில் ரூபா. 926,505 வேறுபாடு அவதானிக்கப்பட்ட போதிலும் அந்த வேறுபாட்டினை ஒப்பீடு செய்து நிதிக் கூற்றுகளில் ஈடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்கீடு ஆய்வுகளில் இவ்வாறான வேறுபாடுகள் அவதானிக்கப்படவில்லை. அதற்குரிய அட்டவணை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | நிதிக் கூற்றுக்களில் மற்றும் பிரதேச அலுவலகங்களில் கணக்கீட்டு அறிக்கைகளில் காணப்படும் வேறுபாடுகள் ஒப்பீடு செய்யப்பட்டு பிழைகள் திருத்தப்பட வேண்டும். |

## 1.6 பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய மற்றும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய தொகை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) பிரதான அலுவலகத்தில் ரூபா 24,690,000 இற்கான ஏழு நாள் கேள்வி வைப்பிற்காக மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய வட்டி வருமானங்களின் கூட்டுத் தொகையான ரூபா. 3,109,378 முதலீடு செய்யப்படாது காணப்படுகின்றது என்பது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. மேலும் பணம் மற்றும் பணததிற்கு ஒப்பான பொருட்களின் கீழ் காட்டப்பட்டுள்ள இந்த ஏழு நான் கேள்வி வைப்பானது 365 நாட்கள் தொடக்கம் 2,949 நாட்கள் வரையான நீண்ட கால வீச்சில் காணப்பட்டுள்ளது என்பது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. | ஏழு நாள் வைப்பினுள் முதலீடு செய்யப்பட்டுள்ள தொகை, குழு ஒன்றின் மூலம் மதிப்பீடு செய்யப்பட்டு 03 மாத நிலையான வைப்பில் முதலீடு செய்வதற்கு தீர்மானம் எடுத்தல் தற்காலத்தில் இடம்பெற்றுள்ளது. அதற்கமைய குறுகிய காலத்தினுள் தேவைப்படும் தொகையினை ஏழு நாள் வைப்பில் முதலீடு செய்தலும் அவ்வாறு அவசரமாகத் தேவைப்படாத தொகை நிலையான வைப்பில் முதலீடு செய்தலும் தற்போது இடம்பெற்று வருகின்றது என்பதனைத் தெரிவித்துக் கொள்கின்றேன். | மிகையான தொகையினை அதிகாரசபைக்கு அனுகூலமான வகையில் முதலீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) 1998 ஆம் ஆண்டில் தேயிலைத் தொழிற்சாலைகளுக்கு நிறப் பாகுபாட்டு இயந்திரம் பெற்றுக் கொடுக்கும் வேலைத் திட்டத்தின் மூலம் நான்கு தனியார் தொழிற்சாலைகளுக்குப் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த ரூபா. 5,916,589 இற்கான கடன் தொகை 2016 ஆம் ஆண்டு தொடக்கம் மீளாய்வாண்டு இறுதி வரையிலும் அறவிடப்பட முடியாது இருந்துள்ளது. | 1998 ஆம் ஆண்டில் தேயிலைத் தொழிற்சாலைகளுக்காகப் புதிய தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துவதற்கு நிறப் பிரிகை இயந்திரங்கள் கடன் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது. அவற்றுள் 04 தொழிற்சாலைகளில் இன்னமும் அறவிடப்பட வேண்டிய தொகையான ரூபா. 5,916,589.00 இல் ஈரியகஹ தொழிற்சாலையில் இருந்து அறவிடப்பட வேண்டிய தொகைக்காக சட்ட ரீதியான செயற்பாடாக வழக்கு நடவடிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அதில் ரூபா. 2,436,448 ஐ அறவிட்டுக் கொள்ளுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. அதே போன்று காலி கூட்டுறவுச் சங்கத்திற்கு வழங்கப்பட்ட இயந்திரத்திற்காகப் பெற்றுக் கொள்ள வேண்டிய தொகை குறித்த கூட்டுறவுச் சங்கத்தின் | அறவிட்டுக் கொள்ளக்கூடிய தொழிற்சாலகளில் இருந்து அறவிடுவதற்கு உடனடியாகத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மற்றும் மூடப்பட்ட தொழிற்சாலைகள் தொடர்பில் விசேட குழு ஒன்றின் மூலம் மேலதிக பரீட்சிப்பு செய்யப்பட்டுப் பொருத்தமான தீர்மானம் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | சொத்துக்கள் முடிவுறுத்தப்பட்டதன் பின்னர் பொறுப்புக்களை விடுவிக்கையில் அதிகாரசபையின் தொகையினைத் தீர்ப்பதற்கு முன்னுரிமை வழங்குவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மீதி 02 தேயிலைத் தொழிற்சாலைகளும் மூடப்பட்ட காரணத்தினால் பணத்தினை அறவிட்டுக் கொள்ள முடியாத நிலையில் காணப்படுகின்றது என்பதனைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். | |

### 1.6.2 செலுத்தப்பட வேண்டிய பணம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மண் பாதுகாப்பிற்காகப் பிரதான அலுவலகம், நுவரெலியா, இரத்தினபுரி மற்றும் கேகாலை ஆகிய பிரதேச அலுவலக அதிகாரப் பிரதேசத்திற்குட்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணக் கொடுப்பனவு வழங்குவதற்கதகப் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த தொகையில் எஞ்சிய ரூபா 13,812,613 மீளாய்வாண்டு இறுதி வரையிலும் திறைசேரிக்கு மாற்றப்படாது கணக்குகளிலேயே தடுத்து வைக்கப்பட்டிருந்தது. | மண் பாதுகாப்பு நிவாரணம் வழங்குதல் அதிகாரசபையின் செயலாற்றுகைத் திட்டத்தினுள் காணப்படும் செயற்பாடுகளினால் பணம் திறைசேரிக்கு மாற்றுதல் இடம் பெறவில்லை. அந்தத் தொகை எதிர்காலத்தில் நிவாரணம் வழங்குவதற்காகப் பயன்படுத்தப்படும் என்பதனைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். | மண் பாதுகாப்பிற்காகப் பெற்றுக் கொடுக்கப்பட்ட நிவாரண மீதித் தொகை திறைசேரியிடம் மாற்றப்பட வேண்டியதுடன் திறைசேரி அனுமதியின்றி செலவிடப்படலாகாது. |
| (ஆ) | 2019 ஆம் ஆண்டில் சேதனப் பசளை 4,924 மெட்ரிக் டொன் கொள்வனவு செய்வதற்காகத் தனியார் நிறுவனமொன்றுக்கு கொள்முதல் வழங்கப்பட்டிருந்த போதிலும் வழங்கப்பட்ட உரம், தேவைக்கு ஏற்றதாக இல்லாது இருந்தமையால் அதே ஆண்டில் இந்த கொள்முதல் நிறுத்தப்பட்டிருந்தது. எவ்வாறு இருப்பினும் | சேதனப் பசளை 4,924 மெட்ரிக் டொன் வழங்குவதற்காகத் தனியார் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் அந்த நிறுவனத்துடன் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது 2019.09.11 ஆம் திகதியிலேயே ஆகும். அதனால் 2019 ஆம் ஆண்டு பெரும் போகத்தில் பயிரிடப்பட்ட பயிர்களுக்காக மட்டும் இந்தப் பசளையைப் | அதிகாரசபையின் நேரடி கண்காணிப்பின் கீழ் அறிக்கை பேணப்பட்டு விவசாயிகளுக்கு சேதனப் பசளையை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| மீளாய்வாண்டில் மேற்கூறிய நிறுவனத்திற்கு ரூபா. 7,377,661 செலுத்தப்பட வேண்டும் எனக் கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் வழங்கப்பட்டிருந்த உர அளவுகளின் சரியான தன்மை உறுதிப்படுத்தப்பட்டது என்பதற்கான சாட்சிகள் கோவைப்படுத்தப்பட்டிருக் கவில்லை. | பயன்படுத்த வேண்டி ஏற்பட்டுள்ளது. அதற்கமைய விவசாயிகளின் வேண்டுகோளின் அடிப்படையில் 601.5 மெட்ரிக் டொன் உரம் மட்டும் அந்த நிறுவனத்தினால் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு பெற்றுக் கொடுக்கப்பட்ட உரம் இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தினால் மாதிரி பரீட்சிப்பின் பின்னர் உரிய தொகை செலுத்தப்பட்டுள்ளது. அந்தத் தொகையினைச் செலுத்துகையில் விவசாயிகளினால் இந்த உரத்தினைப் பெற்றுக் கொண்டதாகக் கையெழுத்திட்ட ஆவணத்தினை பரீட்சித்து பணம் விடுவிக்கப்பட்டுள்ளது. |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i) நிதிப் பிரமாணம் 681 | தொலைக்காட்சி மூலம் விளம்பரம் செய்வதற்குத் தீவிரமான தேவை உள்ளதெனக் கருதப்படும் சந்தர்ப்பங்களில் உரிய அமைச்சின் செயலாளரின் முன் அனுமதியினைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் விளம்பர நடவடிக்கைகள் செய்யப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான முன் அனுமதியின்றி தொலைக்காட்சி மூலம் மேற்கொள்ளப்பட்ட விளம்பர நடவடிக்கைக்காக | 2019 ஆம் ஆண்டிற்குரிய அந்த கொடுப்பனவிற்கான தகவல்கள் பிந்திய காரணத்தினால் அதிகார சபைக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதாகக் கோரிக்கைப் பத்திரம் அனுப்பப்பட்டுள்ளது. குறித்த சேவையினைச் | விளம்பர நடவடிக்கைக் காக நிதிப் பிரமாணத்தி ன் பிரகாரம் குறித்த அமைச்சின் செயலாளரின் முன் அனுமதியிை னப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மீளாய்வாண்டில் ரூபா. 1,741,880 செலவிடப்பட்டிருந்தது. | சரியாகப் பெற்றுக் கொண்டுள்ளதாலும் நிதிப் பிரமாணம் 115 இன் பிரகாரம் அதிகாரசபையின் கணக்கீட்டு உத்தியோகத்தரின் விசேட அனுமதியுடன் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதனைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். | |
| (ii) நிதிப் பிரமாணம் 682 | அரசியலில் ஈடுபட்டுள்ள நபர்கள் மற்றும் அரசியல் கட்சிகள் புலப்படும் செய்திப் பத்திரம் மேலதிக மற்றும் விளம்பரப்படுத்தல் நிறுவனத் தலைவர்களுக்கு தடைசெய்யப்பட்டுள்ள போதிலும், 2019 செப்டெம்பர் 08 ஆம் திகதி பிரசுரிக்கப்பட்டிருந்த பத்திரிகை விளம்பரத்திற்காக மீளாய்வாண்டில் விஜய பத்திரிகை தனியார் நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டிருந்த ரூபா. 632,475 தொடர்பில் அதற்கேற்ப நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் 682 இற்கு உரியதாக மீளாய்வாண்டில் மேலதிக செய்தி அல்லது விளம்பரம் பிரசுரிக்கப்படவில்லை என்பதனைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். கொடுப்பனவு விடுவிப்பு இடம்பெற்றுள்ளது திரண்ட செலவினுள் உள்ளடக்கப்பட்டிருந்த 2019 ஆம் ஆண்டிற்கான செலவு என்பதனைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். | நிதிப் பிரமாணங்களின் ஒழுங்கு விதிகளின் கீழ் விளம்பர நடவடிக்கைகள் செய்தல் வேண்டும். |
| (iii) நிதிப் பிரமாணம் 880(I) | ஆரச நிதி, வருமானம், முத்திரை அல்லது பொருட்கள் பண்டங்களை கையேற்றல் அல்லது பொறுப்பாக இருத்தல், அவ்வாறு இல்லாதவிடத்து அரச நிதி பகிர்ந்தளித்தல் அல்லது வழங்குதல் தொடர்பில் நிர்வாக ரீதியில் பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தர்கள், அரச கணக்கிற்குரிய பணவுறுதிப்பத்திரத்தினை உறுதிப்படுத்தும் காசோலை கையெழுத்திடுபவர்கள் சொந்தக் கடமையினை நேர்மையாக நிறைவேற்றுகின்றனர் என்பதற்கு அரச | நிதிப் பிரமாணம் 880(I) இன் பிரகாரம் செலவுப் பத்திரம் உறுதிப்படுத்தும் மற்றும் காசோலை கையெழுத்திடும் உத்தியோகத்தர்களும் பிணைக் கட்டளைச் சட்டத்திற்கு இணங்க எதிர்காலத்தில் பிணை வைப்பு பெற்றுக் கொள்ளுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனைத் | நிதிப் பிரமாணங்களின் ஒழுங்கு விதிகளின் கீழ் அரச உத்தியோகத்தரினால் பிணை வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | உத்தியோகத்தர்களின் பிணை கட்டளைச் சட்டத்திற்கு இணங்க பிணை வைக்கப்பட வேண்டிய போதிலும் நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் பிணை வைத்திருந்தது பிரதான அலுவலக காசாளர் மட்டுமே ஆகும். | தெரிவித்துக் கொள்ளுகின்றேன். | |
| (ஆ) | இலக்கம் பீஈடீ/12 கொண்ட 2003 ஜூன் 02 ஆம் திகதியிடப்பட்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கை மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 11 ஆம் பிரிவு | 2020 திசெம்பர் 31 ஆம் திகியில் அதிகாரசபையினால் ரூபா. 113,013,766 நிலையான மற்றும் குறுகிய கால வைப்புகளில் முதலீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அதற்காக குறித்த அமைச்சரின் மற்றும் நிதி அமைச்சரின் இணக்கப்பாடு பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இதற்கு முந்தைய கணக்காய்வு அறிக்கைகளில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளவாறு ஊழியர் பணிக்கொடை கொடுப்பனவுகளுக்கு உரியதாக அந்தக் கணக்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த முதலீடுகளுக்குரிய அங்கீகாரம் பணிப்பாளர் சபையினால் திறைசேரி பிரதிச் செயலாளரிடம் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. | நிதி முதலீடு மேற்கொள்ளுகையில் குறித்த அமைச்சரின் மற்றும் நிதி அமைச்சரின் அனுமதியினைப் பெற்றுக்கொள்ள வேண்டும். |
| (இ) | இலக்கம் பீஈடீ1/2015 கொண்ட 2015 மே 25 ஆம் திகதியிடப்பட்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 3.2.2 ஆம் பந்தி | மாதாந்த எரிபொருள் கொடுப்பனவு போதுமானதாக இல்லாத விசேட சந்தர்ப்பங்களில் பணிப்பாளர் சபையின் அனுமதியினைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் செலவிடப்பட்ட மேலதிக எரிபொருள் செலவினை மீள்நிரப்பக் கூடிய போதிலும், அதிகாரசபையின் பொது முகாமையாளரினால் மீளாய்வாண்டில் ரூபா. 303,041 உம் மற்றும் 2021 மார்ச் மாதம் வரையிலும் ரூபா.86,550 உம் மேலதிகமாக மீள்நிரப்பப்பட்டிருந்த போதிலும், அதற்குரிய அனுமதி சுற்றறிக்கையின் பிரகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இலக்கம் PED/2015 கொண்ட 2015 மே 25 ஆம் திகதியிடப்பட்ட சுற்றறிக்கையின் 3.2.2 ஆம் பந்தியில் மாதாந்த எரிபொருள் கொடுப்பனவு போதுமானதாக அல்லாதா சந்தர்ப்பத்தில் பொது முகாமையாளரின் எரிபொருள் செலவினை மீள்நிரப்புவதற்கு அனுமதியினைப் பெற்றுக் கொள்ளுவதற்கு 2017.08.01 ஆம் திகதியிடப்பட்ட பணிப்பாளர் சபை பத்திரம், சற்றறிக்கைகளுக்கு | சுற்றறிக்கையின் பிரகாரம் விசேட சந்தர்ப்பங்களில் பணிப்பாளர் சபையின் அனுமதியின் அடிப்படையில் மட்டுமே செலவிடப்பட்ட மேலதிக எரிபொருள் செலவு மீள்நிரப்பு செய்யப்பட வேண்டும். |

இணங்க சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஆதில் பணிப்பாளர் சபையினால் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள இணைப்பு 08 இல் குறிப்பிடப்பட்டுள்ள தீர்மானம் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. ஆந்த பணிப்பாளர் சபை அனுமதியினைக் கருத்திற் கொண்டு பொது முகாமையாளரின் மேலதிக எரிபொருள் செலவு மீள்நிரப்பல் தலைவரிடம் சமர்ப்பிக்கப்பட்டு தலைவரின் அனுமதியின் அடிப்படையில் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. குறித்த வகையில் நடவடிக்கை எடுக்க ஏதுவாக உள்ளது பணிப்பாளர் சபையினால் இணைப்பிற்கமைவான தீர்மானத்துடன் குறித்த நிலைமையினைத் திருத்தி இது வரையிலும் மேலதிக எரிபொருள் மீள் நிரப்பு செய்தல் பணிப்பாளர் சபையிடம் சமர்ப்பிக்கப்படும்.

## 1.8 வரி பிரமாணங்களுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி சட்டத்தின் 7 ஆம் பந்தியின் | இணங்குகின்றேன். 2021 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் கிடைக்க வேண்டிய வட்டி வருமானத்தின் | 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு வருமான வரி சட்டத்தின் பிராரம் |

| | | |
|---|---|---|
| விதிகளுக்கு முரணாக வருடாந்த வரி வருமானத்தின் அடிப்படையில் உள்நாட்டு இறைவரி திணைக்களத்திடம் வருமான வரி செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அடிப்படையில் வரியினை வேறுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். | வட்டி வருமானத்தின் அடிப்படையில் வருமான வரி செலுத்த வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி பெறுபேறு

மீளாய்வாண்டில் செயற்பாட்டுப் பெறுபேறு ரூபா 406,018,644 மிகையாக உள்ளதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டில் பற்றாக்குறை ரூபா 78,799,836 ஆகும். அதற்கமைய நிதி பெறுபேறில் ரூபா 484,818,480 ஆன அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு அரசின் மானியம் ரூபா. 460,564,538 இனால் அதிகரித்திருந்தமையும் செயற்பாட்டு செலவினம் மற்றும் ஊழியர் பணிக்கொடை ஒதுக்கங்கள் முறையே ரூபா 33,297,481 இனால் மற்றும் ரூபா 27,446,273 இனாலும் குறைந்திருந்தமையும் முக்கிய காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவத்தின் வினைத்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 10 ஏக்கரிலும் குறைவான சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களின் பங்களிப்பினை அதிகரிக்கும் எதிர்பார்ப்பில் தேயிலைப் பயிர்ச் செய்கையின் அபிவிருத்திக்கு பெற்றுக் கொடுக்கும் நிவாரணம் கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 25% ஆல் அதிகரித்திருந்த போதிலும் சிறு தேயிலைத் தோட்டத்துறையின் உற்பத்தி 8.8% ஆல் குறைந்துள்ளது என்பதும் மற்றும் அதற்கமைய தேசிய உற்பத்தியின் பங்களிப்பு 75 சதவீதம் தொடக்கம் 73.85 சதவீதம் வரையிலும் | 2020 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் ஏற்பட்ட வரட்சி காரணமாக சிறு தேயிலைத் தோட்டத்துறையின் உற்பத்தியில் கருத்திற் கொள்ளத்தக்க சேதம் ஏற்பட்டுள்ளது. விசேடமாக இந்த நிலைமையில் சிறு தேயிலைத் தோட்டக் காணிகளில் செயற்கை நீர் வழங்கல் போன்ற வறட்சியினைத் தாங்கக் கூடியதான வேலைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கு முக்கிய காரணமாக அந்த செயற்கை நீர் வழங்கல் முறையினை தாபிப்பதற்குத் தேவையான அடிப்படை மொத்த செலவினை சிறு தேயிலைத் தோட்ட விவசாயிகளால் தாங்குவதற்கு முடியாததால் ஆகும். 2021 ஆம் ஆண்டில் ஆரம்ப | இந்தப் பணம் மற்றும் பொருள் நிவாரணம் சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களைச் சென்றடைதல் சரியான முறையில் இடம் பெறுகின்றதா என்பதையும் அவை குறித்த நோக்கங்களுக்காகவே முழுமையாகப் பயன்படுத்தப்படுகின்றதா என்பதையும் முறையாகக் கண்காணித்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வீழ்ச்சியடைந்துள்ளது என்பதும் அவதானிக்கப்பட்டது. | காலாண்டில் சிறு தேயிலைத் தோட்டத்துறையில் தேயிலை உற்பத்தி 17 மில்லியன் கிலோ கிராமினால் அதிகரித்துள்ளது. அதே போன்று இந்த வறட்சி நிலைமையினைத் தாங்குவதற்கு சிறு தேயிலைத் தோட்டத்துறையின் காணிகளில் செயற்கை நீர் வழங்கல் முறையினைத் தாபித்தல் மற்றும் தேயிலைக் காணிகளில் நிழல் பயிர்களில் சிறந்த விவசாய முறைகளைப் பின்பற்றுவதற்காக 2021 ஆம் ஆண்டில் இது வரையிலும் அதிகாரசபையினால் செயற்கை நீர் வழங்கல் முறையினைத் தாபிப்பதற்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூபா. 100,000 நிவாரணமும் நிழல் பயிருக்காக இலவச கன்றுகள் வழங்கும் வேலைத் திட்டமும் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. | |
| (ஆ) | தேசிய கொள்கைக்கமைய அதிகபட்ச உற்பத்தியினைப் பெற்றுக் கொண்டு தேயிலை பயிரிடும் நிலத்தின் அளவினை நிலையாகப் பேணிச் செல்வதற்கு ஒரு ஆண்டுக்கு 2 சதவீதம் அதாவது 2,300 ஹெக்டெயர் தேயிலை மீளப் பயிரிடப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் தேயிலை மீள் பயிரிடலுக்கான இலக்காகக் கொள்ளப்பட்ட நிலப் பரப்பான 800 ஹெக்டெயரில் மீளப் பயிரிடப்பட்ட நிலப்பரப்பு 648 | தேயிலை மீள்பயிரிடல் இலக்கினை அமைத்தல் 2018 ஆம் ஆண்டின் 3 ஆவது மற்றும் 4 ஆவது காலாண்டுகளில் மற்றும் 2019 ஆம் ஆண்டின் 1 ஆவது மற்றும் 2 ஆவது காலாண்டுகளில் தயாரிக்கப்பட்ட நிலப் பரப்பினை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதற்கமைய 2019 ஆம் ஆண்டில் நிலம் தயாரிக்கப்பட்ட 677 ஹெக்டெயர் மற்றும் 2019 ஆம் ஆண்டில் நிலம் தயாரிக்கப்பட்ட 196 ஹெக்டெயர் ஆகிய செயலாற்றுகை பெறுமதியின் அடிப்படையில் 2020 ஆம் ஆண்டில் தேயிலை மீள் பயிரிடல் இலக்கு 870 | தேசிய கொள்கைகளுக்கமைய பயிரிடப்படும் நிலப் பரப்பினை நிலையாகப் பேணுவதற்கு ஒரு வருடத்திற்கு 2 சதவீதம் அதாவது 2,300 ஹெக்டெயரில் தேயிலை மீள் பயிரிடல் மேற்கொள்ளப்படல் வேண்டும் |

| | | |
|---|---|---|
| ஹெக்டெயர் மட்டுமே ஆகும். | ஹெக்டெயராக இருக்க வேண்டியதுடன் அந்தப் பெறுமதி 800 ஹெக்டெயராக கொள்ளப்பட்டுள்ளது. அந்த இலக்கில் 2020 ஆம் ஆண்டில் ஜனவரி மாதம் பெரும் போகத்தில் கன்றுகள் பயிரிடலில் ஏற்பட்ட கடும் வறட்சி நிலைமையும் 2020 ஆம் ஆண்டு முதல் காலாண்டில் ஏற்பட்ட கொரோனா தொற்று நிலைமை காரணமாக இந்த கன்றுகள் நடும் செயற்பாட்டிற்கு தடையாக இருந்துள்ளது. அதே போன்று களத்தில் கன்றுகளின் தட்டுப்பாடும் இதற்கு பாதகமாக உருவாகி உள்ளது. இந்த கன்றுகளின் தேவைப்பாட்டினைத் தற்போது செயற்பட்டு வரும் 500 தேயிலை நாற்று மேடை செயற்றிட்டத்தின் மூலம் பூரணப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |

**3.2 செயற்பாட்டு வினைத்திறனின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) அதிகார சபையின் 2020 ஆண்டறிக்கைக்கமைய தேயிலை மீள் பயிரிடல் நிவாரணத்தின் கீழ் 2012 ஆம் ஆண்டு தொடக்கம் 2018 ஆம் ஆண்டு வரைிலும் முதலாம் தவணையான நிலத் தயாரிப்பிற்காக 7,077 ஹெக்டெயருக்கு நிவாரணத் தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் மீள் பயிரிடல் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலப் பரப்பு 5,244 ஹெக்டெயர் மட்டுமே ஆகும். | 1,833 ஹெக்டெயர் நிலப் பரப்பில் தேயிலை மீள் பயிரிடல் மேற்கொள்ளப்படாமைக்குக் காரணமானது குறித்த காலத்தில் திறைசேரியிடம் இருந்து நிதி கிடைக்காமையும் விவசாயிகளினால் சொந்தக் காரணங்களின் அடிப்படையில் கன்றுக் நடும் செயற்பாட்டினை பிற்போட்டிருந்தமையும் ஆகும். | நிவாரணம் பெறுவோரை மீள் பயிரிடலில் ஈடுபடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | ஆண்டறிக்கைக்கமைய மீளாய்வாண்டில் தாய்ப் பயிரின் மூலம் ஒட்டுக் கிளை உற்பத்தி வருடாந்த இலக்கின் 51 சதவீதத்தினை மட்டுமே கைப்பற்றி இருந்ததுடன் காலி, மாத்தறை, நுவரெலியா. களுத்துறை, ஹன்தான ஆகிய பிரதேச அலுவலகங்களில் அமைக்கப்பட்டுள்ள தாய்ப் பயிர்களின் வருமானத்தை விஞ்சி செலவிடப்பட்டிருந்தது. | 2020 இன் வருடாந்த தாய்ப் பயிர் ஒட்டு பயிர் உற்பத்தி செய்தல் குறித்த இலக்கினை எட்டுவதற்கு முடியாது போனமைக்கு தற்போதுள்ள தாய் பயிரானது 21 வருடங்களை விடவும் பழமையான தாய் பயிராக இருப்பதும் 2020 ஆம் ஆண்டில் தாய்ப் பயிரின் மூலம் ஒட்டுக் கிளை உற்பத்தியில் அவ்வருடத்தில் நிலவிய வறட்சி காலநிலையும் காரணமாக இருந்தது என்பதனைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். | தாய்ப் பயிரின் மூலம் ஒட்டுக கிளை உற்பத்தியினை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | அதிகாரசபையினால் பேணிச் செல்லப்படும் நிறுவன ரீதியிலான தேயிலை நாற்று மேடைகளில் குறைந்தபட்ச உற்பத்திக்காக செலவிடப்படும் தொகையினையேனும் உள்ளடக்க வேண்டும் என தேயிலை நாற்று மேடை முகாமைத்துவ அறிவுறுத்தல்கள் அழுத்தமாகத் தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும் மாவரல மற்றும் நெல்லிகொள்ள தேயிலை நாற்று மேடைகளின் வருமானமானது, செலவினைத் தீர்ப்பதற்கேனும் போதுமானதாக இருக்கவில்லை. மேலும் தேயிலை நாற்று மேடைகளில் தேயிலை கன்றுகள் இறக்கும் வீதம் 5 சதவீத மட்டத்திலேயே பேணப்பட வேண்டிய போதிலும், 2020 திசெம்பர் 31 ஆம் திகதியில் தேயிலை நாற்று மேடைகளில் கன்றுகள் அழியும் வீம் | கன்றுகள் இறக்கும் வீதம் 5 சதவீத மட்டத்தில் பேணப்பட வேண்டியதுடன் அதற்கான மாற்றீடாக கல்சிமேற்றல் நாற்று மேடை ஆரம்பிக்கப்பட்டு பேணிச் செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதுடன் அவ்வாறான மாற்றீட்டுத் திட்டத்தினை பின்பற்றாததன் பலனாக அந்த நாற்று மேடைகளின் கன்றுகளின் இறப்பு வீதம் அதிகரித்துச் சென்றுள்ளது. இந்த நிலைமையை எதிர்காலத்தில் தவிர்த்துக் கொள்ளுவதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நாற்று மேடை முகாமைத்துவ அறிவுறுத்தல்களுக்கமைய மாற்றீட்டுத் திட்டத்தின் மூலம் கன்றுகளின் இறப்பு வீதத்தை 5% மட்டத்திலே பேணுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 19 சதவீதத்திற்கும் இற்கும் 70 சதவீதத்திற்கும் இடையில் காணப்பட்டது. | | |
| (ஊ) | தேயிலைத் துறைக்குத் தேவையான வருடாந்த ஒட்டுத் தேயிலைக் கன்றுகளின் தேவைப்பாட்டினை நிறைவேற்றுக் கொள்ளுவதற்காக 25 மில்லியன் தேயிலைக் கன்றுகளுக்கான விசேட தேயிலை நாற்று மேடைகளை அமைத்தலில் 500 நாற்று மேடைகள் விசேட செயற்றிட்டத்தில் மீளாய்வாண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக இலங்கை தேயிலை சபையின் நிதியத்தில் கிடைத்திருந்த ரூபா 75 மில்லியன் தொகையில் ரூபா 29.75 மில்லியன் செலவிடப்பட்டு 17,675,000 கன்றுகள் கொள்ளளவுக்கு சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களுக்கு நிவாரணம் வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறு இருப்பினும் கிடைத்துள்ள நிதியத்தில் ரூபா.45 மில்லியன் அதாவது 60 சதவீதம் மீளாய்வாண்டு இறுதியில் அதிகாரசபையில் எஞ்சியுள்ளது என்பது அவதானிக்கப்பட்டது. | இலங்கை தேயிலை சபையின் நிதியத்தில் ரூபா. 75 மில்லியன் தொகை அதிகாரசபைக்கு கிடைத்ததுடன் பயனாளிகளைத் தெரிவு செய்தல், தெரிவு செய்யப்பட் பயனாளிகளுக்கு நிவாரணப் பொருட்கள் வழங்குவதற்கு ஈடுபடுத்தும் பொருட்களைப் பெற்றுக்கொள்ளுவதற்காக கொள்முதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளுகையில் நிலவிய கொவிட் நிலமையினால் கருத்திற் கொள்ளத்தக்க காலதாமதம் ஏற்பட்டதுடன் எதிர்பார்க்கப்பட்ட நடவடிக்கைகளும் தாமதமாகின. இது வரையிலும் அந்தத் தொகை உகந்த காரணங்களுக்கு ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன் இரண்டாவது தவணைக்காக ரூபா 125 மில்லியன் பெற்றுக்கொள்ளுவதற்கும் அந்தத் தொகையினை முறையாக செலுத்துதலும் இடம் பெற்றுள்ளது. | பெற்றுக் கொள்ளப்பட்ட தொகையினை விரைவில் பயன்படுத்த வேண்டும் |

### 3.3 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2018 ஆம் ஆண்டின் வருடாந்த வரவு செலவு யோசனைக்கமைய சிறு தேயிலைக் காணிகளில் சரியான விவசாய கொள்கைகள் குறிக்கப்பட்ட வகையில் மேற்கொள்ளுவதை ஊக்குவிப்பதற்குத் தேவையான விவசாய உபகரணங்களை சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களுக்குப் பகிர்தளிப்பதற்காக ரூபா.250 மில்லியன் தொகை அமைச்சரவை அனுமதியுடன் கிடைத்திருந்ததுடன் தேவைக்கு அதிகமாக இயந்திரங்கள் கொள்வனவு செய்த காரணத்தால் மற்றும் பகிர்ந்தளிக்கப்பட்ட முறைமையொன்று இல்லாத காரணத்தால் ரூபா. 94,408,739 பெறுமதியான முள்ளு, மணவெட்டி, அலவாங்கு, தண்ணீர் மோட்டார், மருந்து தெளிக்கும் இயந்திரம் போன்ற 13,650 அலகு விவசாய உபகரணங்கள் பயன்படுத்தப்படாது மீளாய்வாண்டின் இறுதியில் பிரதான அலுவலகத்திலும் மற்றும் பிரதேச அலுவலகங்களிலும் களஞ்சியப்படுத்தப்பட்டு இருந்தன. | சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களுக்குப் பகிர்ந்தளிப்பதற்காக திரவம் தெளிக்கும் கருவி மற்றும் தண்ணீர் மோட்டார் என்பன பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சினால் கொள்வனவு செய்யப்பட்டு 2019 ஆம் ஆண்டு திசெம்பர் இறுதித் தினங்களில் பிரதான அலுவலகக் களஞ்சியசாலைக்கு வழங்கப்பட்டுள்ளது. ஏனைய ஆயுதத் தொகுதிகள் 2019 ஆம் ஆண்டில் இடம்பெற்ற தேர்தல் காரணமாக இருப்பினைப் பகிர்ந்தளித்தல் தேர்தல் ஆணையாளரினால் இடைநிறுத்தப்பட்டிருந்தது. அதே போன்று 2020 ஆம் ஆண்டில் நிலவிய தொற்று நோய் நிலை போன்ற காரணிகளின் காரணத்தால் சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களை ஒன்று கூட்டி பயிற்சி வேலைத் திட்டங்களை நடாத்தி விவசாய உபகரணங்களை வழங்க முடியாது களஞ்சியசாலைகளில் பொருட்கள் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளது. ஆயினும் 2021 ஆம் ஆண்டில் இந்த இருப்புகளைப் பகிர்ந்தளிக்க தேவையான நடவடிக்கைகள் ஆயத்தப்படுத்தப்பட்டுள்ளது என்பதனைத் தெரிவித்துக் கொள்கிறேன். | தீர்மானிக்கப்பட்ட முறைமைக்கேற்ப உபகரணங்களைப் பகிர்ந்தளிக்க விரைவில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.4 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| உதவி முகாமையாளர் (மனிதவளம் / நிர்வாகம்) பதவி 2019 மே 31 ஆம் திகதி தொடக்கம் வெற்றிடமாக இருப்பதுடன் 2 வருட காலம் கடந்துவிட்ட போதிலும் அந்த பதவியை நிரப்புவதற்குத் தவறியிருந்ததுடன் 8 பிரதேச அலுவலகங்களில் 4 பிரதேச அலுவலகங்களில் 4 பிரதேச முகாமையாளர் பதவிகள் மீளாய்வாண்டு இறுதியில் வெற்றிடமாகக் காணப்பட்டது. அதே போன்று 17 தேயிலை பரீட்சிப்பாளர் / செயற்றிட்ட உத்தியோகத்தர் வெற்றிடங்களை 2020 திசெம்பர் 31 ஆம் திகதியில் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்திருக்காததுடன் உற்பத்தித்திறனான செயற்றிட்ட சேவைக்காக தேயிலை விவசாயிகள் மற்றும் தேயிலை பரீட்சிப்பு செயற்றிட்ட உத்தியோகத்தர் விகிதம் 1:1000 ஆக மட்டும் இருக்க வேண்டிய போதிலும் மீளாய்வாண்டு இறுதியில் அது 1:2807 ஆக இருந்தது என்பது அவதானிக்கப்பட்டது. | 2019.05.31 ஆம் திகதி தெடக்கம் இந்த அதிகாரசபையில் உதவி முகாமையாளர் (நிர்வாகம்) பதவியில் நிலவும் வெற்றிடத்திற்கான ஆட்சேர்ப்பினை மேற்கொள்ளுவதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் மூலம் அனுமதி பெறப்பட்டிருந்ததுடன், ஆட்சேர்ப்பு நடைமுறை ஒழுங்கு விதிகளுக்கு இணங்க 2019 ஆம் ஆண்டில் பதவிக்கான ஆட்சேர்ப்பு செய்வதற்கு நேர்முகத் தேர்விற்காக 2019.09.17 ஆம் திகதி தீர்மானிக்கப்பட்டிருந்தது. பணிப்பாளர் சபையின் மூலம் அதற்காக அங்கீகரிக்கப்பட்ட நேர்முகத் தேர்வு சபையின் மூலம் 2019.09.17 ஆம் திகதி நேர்முகத் தேர்வு நடாத்தப்பட்ட போதிலும் நேர்முகத் தேர்வு சபையின் பரிந்துரை அல்லது புள்ளி பட்டியலை வழங்க நடவடிக்கை எடுத்திருக்காமை மற்றும் அந்தக் காலப் பகுதியில் அரசின் மூலம் தேர்தல் கால எல்லை பிரசுரிக்கப்பட்டிருந்தமையால் அனைத்து ஆட்சேர்ப்புக்களும் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட வேண்டிய நிலை ஏற்பட்டதனால் இந்த ஆட்சேர்ப்பினை மேற்கொள்ள முடியவில்லை. மேற்கூறிய நிலைமை மற்றும் பதவியில் நிலவும் வெற்றிடத்தை விரைவில் நிரப்புவதற்கான தேவைப்பாட்டினை பெருந்தோட்ட அமைச்சு மற்றும் பணிப்பாளர் சபையிடம் அறிக்கையிடப்பட்ட பின்னர் பெற்றுக் கொடுக்கப்பட்ட அறிவுறுத்தலின்படி 2019.09.17 ஆம் திகதி இடம்பெற்ற நேர்முகத் தேர்வினை செல்லுபடியற்றதாகக் கருதி மீளவும் அப்பதவிக்காக ஆட்சேர்ப்பு செய்வதற்கு ஆட்சேர்ப்பு நடைமுறை ஒழுங்கு விதிகளுக்கு இணங்க உள்ளக மற்றும் வெளிவாரி உத்தியோகத்தர்களிடம் விண்ணப்பங்கள் கோரப்பட்டு | வெற்றிடத்திற்கான ஆட்சேர்ப்பு செய்தல் விரைவில் செய்யப்பட வேண்டும். |

2021.01.07 ஆம் திகதி நேர்முகத் தேர்வினை மீள நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அந்த நேர்முகத் தேர்வினையும் செல்லுபடியற்றதாக்கி மீண்டும் விண்ணப்பம் கோரப்பட்டு நேர்முகத் தேர்வினை மீளவும் நடாத்துவதற்கு அரச அமைச்சினால் கிடைத்துள்ள அறிவுறுத்தலுக்கமைய பணிப்பாளர் சபை வழங்கியுள்ள அனுமதிக்கேற்ப மீண்டும் விண்ணப்பம் கோருவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதிகாரசபையின் பிரதேச முகாமையாளர் பதவியில் நிலவும் வெற்றிடத்திற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு 2019.08.06 ஆம் திகதி இடம் பெற்ற நேர்முகத் தேர்வானது அமைச்சின் இலக்கம் MPI/Admin/09/Vacancies/TSHDA/ V-VII கொண்டதும் 2019.11.21 ஆம் திகதியிடப்பட்ட கடிதத்திற்கமைய செல்லுபடியற்றதாக்கப்பட்டு இருந்தது.

அதன் பின்னர் மீண்டும் ஆட்சேர்ப்பு நடைமுறை ஒழுங்கு விதிகளின்படி 2020.08.17 ஆம் திகதி உள்ளக விண்ணப்பதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டதுடன் அது தொடர்பில் எழுந்த சிக்கல் நிறைந்த நிலைமை தொடர்பில் அரச அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைக்கமைய, கிடைத்துள்ள விண்ணப்பங்கள் தொடர்பில் நடவடிக்கை எடுத்தலை செல்லுபடியற்றதாக்கி அது தொடர்பில் மீண்டும் விண்ணப்பங்கள் கோரப்பட்டு நேர்முகத் தேர்வினை மீளவும் நடாத்துவதற்கு அரச அமைச்சினால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. அதற்கு உரியதாக பணிப்பாளர் சபை வழங்கியுள்ள அனுமதிக்கமைய மீளவும் விண்ணப்பங்கள் கோரப்பட்டு ஆட்சேர்ப்பு செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தேயிலை பரீட்சிப்பு / செயற்றிட்ட உத்தியோகத்தர் பதவியில் நிலவும் வெற்றிடத்திற்காக

| | | |
|---|---|---|
| | ஆட்சேர்ப்பு செய்வதற்கு பகிரங்க விளம்பரம் பிரசுரிக்கப்பட்டு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதுடன் ஆட்சேர்ப்பு நடைமுறை ஒழுங்கு விதிகளின்படி நடாத்தப்பட வேண்டிய ஆட்சேர்ப்பு போட்டிப் பரீட்சையானது நிலவும் தொற்று நோய் நிலைமைக்கு முகங் கொடுத்து நடாத்துவதற்கு முடியாத காரணத்தால் ஆட்சேர்ப்பு செய்தல் தாமதமாகி உள்ளது. | |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 ஆண்டறிக்கையினைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலக்கம் பீஈடீ/12 கொண்டதும் 2003 ஜுன் 02 ஆம் திகதியிடப்பட்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.3 ஆம் பிரிவின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களின் பின்னர் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குடன் கணக்காய்வாளர் அறிக்கை மும்மொழிகளிலும் பாரளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் கணக்காய்வு திகதி வரையிலும் இறுதியாக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது 2018 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கை மட்டுமே ஆகும். | 2019 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கை கொவிட் தொற்று நோய் நிலைமை காரணமாக 150 நாட்களை விடத் தாமதமான போதிலும் தற்போது ஆண்டறிக்கை மொழி பெயர்ப்பின் பின்னர் அமைச்சரவை அனுமதிக்காகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

**4.2 உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப் பிரமாணம் 134(3) இன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் | மேலதிக அறிவுறுத்தல்கள் அமைச்சிடம் இருந்து பெற்றுக் கொண்டு எதிர் வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகள் |

| | | |
|---|---|---|
| நாயகத்திடம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் அதிகாரசபையின் உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகள் சமர்ப்பிக்கப்படவில்லை. | என்பதனைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். | கணக்காய்வாளர் நாயகத்திடம் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**4.3 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஐக்கிய நாடுகளின் நிலைபேறான அபிவிருத்தி நோக்கம் தொடர்பான “2030 கோட்பாடு” பத்திரத்திற்கமைய சபையினால் தமது விடயப் பரப்பின் கீழ் கொள்ளப்படும் செயற்பாடுகள் தொடர்பில் எட்டப்பட வேண்டிய இலக்குகள் மற்றும் அவற்றின் முன்னேற்றத்தினை அளவிடுவதற்குப் பொருத்தமான சுட்டியையும் வருடாந்தம் எட்டப்பட வேண்டிய திருப்புமுனையினையும் கண்டறிந்து உள்ளடக்கப்பட்டிருக் கவில்லை. | 2021 ஆம் ஆண்டில் கண்டறியப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் 2020 ஆம் ஆண்டிற்குரிய அதே வகையிலேயே சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகாரசபையினால் கண்டறியப்பட்டிருந்ததுடன் அவை செயற்படுத்தப்பட்டும் உள்ளது. மேற்கூறிய அனைத்து வேலைத் திட்டங்களும் அந்தந்த வேலைத் திட்டத்திற்குரிய முறையிலேயே (KPI) சுட்டி மூலம் முன்னேற்றத்தினை அளவிடல் முன்னேற்ற அறிக்கைகளினால் மேற்கொள்ளப்படுவதுடன் வருமானத்தினை அதிகரித்தல் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துதல், சமூக காரணிகளை அளவிடுதலை மேற்கொள்ளுதல் என்பன நிறுவன விடயப் பரப்பின் கீழ் செய்ய முடியாததாகும். அவ்வாறு இருந்த போதிலும் 2020 ஆம் ஆண்டு மலைநாடு, மத்திய நாடு மற்றும் தாழ் நிலம் என செயற்பலன் சுட்டிகள் தயாரிக்கப்பட்டு அதன் முன்னேற்றத்தை அளவிடலும் மற்றும் 2021 ஆம் ஆண்டில் சிறு தேயிலைத் தோட்ட துறையின் மொத்த இலக்கு 230 கிலோ கிராமாக அளவிடும் திருப்புமுனை ஏற்படுத்தப்பட்டுள்ளது. | 2017 இன் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி சட்டத்திற்கு இணங்க நிலையான அபிவிருத்தி நோக்கங்கள், இலக்கு மற்றும் பிரதான செயலாற்றல் குறிகாட்டிகள் இனங்காணப்படல் வேண்டும். |